திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்த மருத்துவத்துறை கட்டமைப்பு பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்துவைத்தார், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், க.மாரிமுத்து எம்.எல்.ஏ., கொரடாச்சேரி ஒன்றியக்குழு தலைவர் உமாபிரியா பாலசந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

‘நீட்’ ஊழல் மையமாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் உள்ளன

பா.ஜ.க. வின் பிடியிலிருந்து கல்வித் துறையை மீட்க வேண்டும்!

புதுடெல்லியில் ராகுல்காந்தி எம்.பி.பேட்டி!

டெல்லி : ஜூன் 21 -

பாஜக ஆளும் மாநிலங்கள் நீட் ஊழல் மையங்களாக திகழ்கிறது. நீட் வினாத்தாள் கசிவைத் தடுப்பதில் பிரதமர் மோடி தோல்வி அடைந்துவிட்டார் என்று காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், “நீட் வினாத்தாள் கசிவுகளை தடுப்பதில் பிரதமர் மோடியின் அரசு தோல்வி அடைந்துவிட்டது. மத்தியப் பிரதேசத்தை உலுக்கிய வியாபம் ஊழலை விட மிகப்பெரிய ஊழலாக நீட் முறைகேடு உருவெடுத்துள்ளது. அரசின் அனைத்து அமைப்புகளையும் பாஜக கைப்பற்றியதே நீட் முறைகேடு போன்ற ஊழலுக்கு காரணம். நான் இரண்டாம் கட்ட ஒற்றுமை நியாய யாத்திரை சென்ற போது வினாத்தாள் கசிவு பற்றி மாணவர்கள் என்னிடம் கூறினர். நீட் ஊழல் மையமாக பாஜக ஆளும் மாநிலங்கள் திகழ்கின்றன

என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து இந்திய கல்வித்துறையில் பா.ஜ.க.வும் அதன் அமைப்புகளும் ஊடுருவி அதை குட்டிச்சுவராக்கி விட்டன. கல்வியை செல்லாததாக்கும் நடவடிக்கையை மோடி அரசு தற்போது செய்துள்ளது. சுதந்திரமான கல்வி முறை இல்லாமல் போனதற்கு காரணமே பாஜகவும் அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்ஸும்தான்.சுதந்திரமான கல்வி முறையை மாற்றி ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் சித்தாந்தத்தை புகுத்தி விட்டது. துணைவேந்தர்கள் தகுதி அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களே துணைவேந்தர்களாக

நியமிக்கப்படுகின்றனர். ஆர்.எஸ்.எஸ். பிடியில் இருந்து கல்வி நிறுவனங்களை மீட்காதவரை மாணவர்களின் துயரங்கள் நீங்க ப்போவது இல்லை. ஆர்.எஸ்.எஸ்., பாஜக பிடியில் இருந்து கல்வித்துறையை மீட்காதவரை வினாத்தாள் லீக், தேர்வு ரத்து தொடரும் எனவும் தெரிவித்தார்.

யுஜிசிநெட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது; நீட் தேர்வுக்கு என்ன நிகழப் போகிறது என்பது தெரியவில்லை. என்ன நடவடிக்கையாக இருந்தாலும் தான் தோன்றித்தனமான முறையில் மேற்கொள்ளக் கூடாது . மோடியின் கவனம் முழுக்க முழுக்க சபாநாயகர் தேர்வில் தான் உள்ளது. மாணவர்களை பொறுத்தவரை பொறுப்பற்ற முறையில் அரசு செயல்படுவதை அனுமதிக்க மாட்டோம். உளவியல் ரீதியில் பிரதமர் மோடி உருக்குலைந்து போய்விட்டார். வாரணாசியில் பிரதமர் மோடி கார் மீதே செருப்பு வீசப்பட்டுள்ளது. எந்தவித சமரச முறைக்கும் மோடி தயாராக இல்லை.

கடினமாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள், வினாத்தாள் முன்கூட்டியே கசிவதால் பாதிக்கப்படுகின்றனர். தேர்வு முறைகேடுகளை நாடு முழுவதற்கும் பா.ஜ.க. அரசு விரிவுபடுத்தி விட்டதால் மாணவர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர். மாணவர்கள் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். முதலாவதாக இளைஞர்கள் வேலை வாய்ப்பு கிடைக்காமல் வேதனையில் உள்ளனர். அக்னிபாத் திட்டத்தின் மூலம் ராணுவத்தில் தொடர்ந்து பணிபுரிவதற்கான வாய்ப்பை பா.ஜ.க. அரசு பறித்துவிட்டது. இளைஞர்கள் வேலை பெறுவதற்கான வாய்ப்புகளை ஒவ்வொன்றாக ஒன்றிய அரசு மூடி வருகிறது,”இவ்வாறு ராகுல்காந்தி தெரிவித்தார்.

அண்ணாநகர் வடக்கு - தெற்குப் பகுதிகளில் வாக்காளர்களுக்கு

தயாநிதி மாறன் எம்.பி. இன்று நன்றி தெரிவிக்கிறார்!

பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம் - ச.பரமசிவம் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 21

அண்ணாநகர் வடக்கு - தெற்குப் பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் இன்று (21.6.2024) வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சிகளில் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு பகுதிக் கழகச் செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

இது குறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அண்ணாநகர் வடக்கு பகுதி - 21.06.2024 - வெள்ளிக் கிழமை - மாலை 4.00 மணியளவில்

100வது வட்டம் : துவங்கும் இடம் : முத்து சோலை தெரு, திருவீதி அம்மன் கோவில் தெரு, கும்மாளம்மன் கோவில் தெரு, வள்ளியம்மாள் தெரு, உமையாள் தெரு, தியாகப்பா தெரு, அழகப்பா நகர்.

100அ வட்டம் : ஆல்ஸ் ரோடு, டி.பி.சத்திரம் 7வது தெரு, 10வது தெரு, டி.பி.சத்திரம் 1வது பிரதான சாலை, கே.வி.என்.புரம் 4வது தெரு வழியாக ஜோதியம்மாள் நகர், கே.வி.என்.புரம் 2வது தெரு, அம்பேத்கர் சிலை.

101வது வட்டம் : மண்டபம் 3வது குறுக்கு தெரு, குஜ்ஜி ரோடு, ஜி.பிளாக், காந்தி ரோடு, வ.உ.சி. நகர், ஆர்.வி.நகர், ஆர்.வி.நகர் மெயின் ரோடு, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை.

101 அ வட்டம் : திருவீதி அம்மன் கோவில் தெரு, மஞ்ச கொல்லை..

102வது வட்டம் : பாரதிபுரம், கெஜலட்சுமி காலனி, பெரியகூடல், பெரிவரி சாலை.

103வது வட்டம் : என்.எஸ்.கே. நகர்.

103 அ வட்டம் : நடுவாங்கரை, எம்.ஜி.ஆர். காலனி, நியூ காலனி ஆகிய வீதிகளில் சென்று நிறைவடைகிறது.

மேற்கண்ட நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு ச.பரமசிவம் தமது அறிக்கையில் கூறி யுள்ளார்.

அண்ணாநகர் தெற்கு பகுதி - 21.06.2024 - வெள்ளிக் கிழமை - மாலை 6.00 மணி

105வது வட்டம் : துவக்கம்: அரும்பாக்கம் திருவீதியம்மன் கோயில் தெரு, வள்ளுவர் சாலை, இந்திரா காந்தி தெரு, சக்திநகர், மாரியம்மன் கோயில் தெரு வழியாக

105 அ வட்டம் : அசோகா நகர், திருவள்ளுவர் நகர், கண்ணகி தெரு, கல்கிநகர், இராணி அண்ணாநகர், வாட்டர் டேங்க் ரோடு வழியாக எம்.எம்.டி.ஏ. காலனி மெயின் ரோடு வழியாக விநாயக புரம் முதல் தெரு, அன்னை சத்தியா நகர் மெயின் ரோடு, திருக்குமரபு ரம் மெயின் ரோடு வழியாக 100 அடி ரோடு,

106வது வட்டம் : பெரியார் பாதை (அமிர்த வள்ளி திருமண மண்டபம் அருகில்) வள்ளலார் தெரு, பத்மநாப நகர் மெயின் ரோடு,

106 அ வட்டம் : பத்மநாப நகர் தமிழர் வீதி சந்திப்பு, கோ.சு.மணி தெரு, இந்திரா காந்தி தெரு, இளங்கோ அடிகள் தெரு, பெரியார் பாதை மெயின் ரோடு, அண்ணா நெடும் பாதை,

107அ வட்டம் : முத்து லாண்டி காலனி 1 வது மெயின் ரோடு, பிள்ளையார் கோயில் தெரு வழியாக (சின்ன சந்து)

107வது வட்டம் : அசாத் நகர் நடுப்பாலம் வழியாக, கலக்ட்ரேட் காலனி 4வது குறுக்கு தெரு, ரயில்வே காலனி 3வது தெரு வின்சென்ட் பள்ளி வழியாக) நெல்சன் மாணிக்கம் ரோடு, மேத்தா நகர் மெயின் ரோடு, மேத்தாநகர் பாலம் வழியாக சுப்புராயன் தெரு, அமைந்தகரை யாதவாள் தெரு, கிழக்கு மாட தெரு, வெள்ளாள தெரு, அமைந்தகரை பெருமாள் கோயில் தெரு ஆகிய வீதிகளில் சென்று நிறைவடைகிறது..

மேற்கண்ட நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர்கள் ந.இராமலிங்கம், ச.பரமசிவம் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கௌதம் சிகாமணி ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள் உடன் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மற்றும் சன்.பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, என்.இ.கே.மூர்த்தி, ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், சே.பிரேம் ஆனந்த், ஜெ.சுதாகர், ஜெ.மகாதேவன், கே.சுரேஷ்குமார் உள்ளனர்.

கேளம்பாக்கம் ஜோதி நகர் கிளைச் செயலாளர் கே.ஏ.டி.அன்பு ஏற்பாட்டில் சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் பேரூராட்சி தலைவருமான எஸ்.ஆர்.எல்.இதய வர்மன் முன்னிலையில் கேளம்பாக்கம் அ.தி.மு.க. இளைஞர் அணியை சார்ந்த 25 பேர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இவர்கள் அனைவரையும் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் வரவேற்று பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார். இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்களும், இளைஞர் அணி நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதுபான கொள்கை முறைகேடு வழக்கு:

அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன்!

டெல்லி நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜூன் 21

டெல்லி மாநில முதல்வர் கெஜ்ரிவால் மாநில மதுபான கொள்கை தொடர்பான பணமோசடி வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட அவரை சில நாட்கள் அமலாக்கத்துறை காவலில் எடுத்து விசாரணை மேற்கொண்டது. இதன்பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்றம் அவரை நீதி

மன்ற காவலில் அடைக்க உத்தரவிட்டது. அதன்படி டெல்லி திகார் ஜெயிலில் அடைக்கப்பட்டார்.

பின்னர் தன்னை கைது செய்தது சட்டவிரோதம் என உத்தரவிட வேண்டும் என டெல்லி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணை நடைபெற்று கொண்டிருக்கும்போது தேர்தல் பிரசாரத்திற்காக ஜூன் 1ந்தேதி வரை இடைக்கால ஜாமின் வழங்கி உத்தரவிட்டது.

பின்னர் 2ந்தேதி மீண்டும் ஜெயிலில் அடைக்கப்பட்டார். இந்த நிலையில் அவரது நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்தது. இந்த நிலையில் விசாரணை நீதிமன்றம் அவரது நீதிமன்ற காவலை ஜூலை 3ந் தேதி வரை நீடித்துள்ளது.

இதனையடுத்து, மருத்துவ பரிசோதனைக்காக கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கக்கோரி டெல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கின் விசாரணை நேற்று நடைபெற்றது.

அப்போது டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு டெல்லி நீதிமன்றம் ஜாமின் வழங்கியது.

பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் தலைமை! கே.மகேஷ் வரவேற்புரை!

சேப்பாக்கம் 62 அ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம்!

பவானி கண்ணன் சிறப்புரை! - தயாநிதிமாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21 -

சென்னை தெற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி 62 அ வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கம் நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வாரியான வாக்குகள் அளித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிக்கும் மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 23.6.2024 ஞாயிறு மாலை 6 மணிக்கு கலவை தெரு, சாமி பண்டாரம் தெரு சந்திப்பு சிந்தாதிரி ப்பேட்டையில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பகுதிச் கழகச் செயலாளரும் 9-வது மண்டலக் குழுத் தலைவருமான எஸ்.மதன்மோகன் தலைமை வகிக்கிறார். 62 அ வட்டச் செயலாளர் கே.மகேஷ் வரவேற்கிறார். 62-வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.ஜெகதீசன் எம்.சி., எம்.ராஜரத்தினம், எஸ்.சுரேஷ்குமார், பி.ராஜேஷ், மாக்ஸி கே.அலீப், மல்லிகா பீ, பி.பாலசந்தர், எம்.நந்தகுமார், ஆ.சிவராஜ், எப்.நசீர், ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.கார்த்திக், யு.பாஷா, ஆர்.ரங்கநாதன், ஏ.அன்வர் பாஷா, பி.எஸ். சத்தீஷ், எஸ்.சங்கர், கே.டி.ராமலிங்கம், சங்கரபாண்டியன், என்.எஸ்.பாஸ்கரன், எஸ். பரமசிவம், வி.நடராஜ், என்.ஸ்ரீகாந்த், வேளாங்கன்னி, சாந்தி வசந்தா, ஆனந்தி, லட்சுமிபாய், சுந்தர்பாய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நலத்திட்ட உதவிகளை வழங்கி தயாநிதிமாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தலைமைக் கழகப் பேச்சாளர் பவானி கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபு, ஏ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், எம்.சி.பி.இளையாராஜா, எஸ்.கே.ராஜ், ப.சிதம்பரம், ஈஸ்வரி வெங்கடேசன், எஸ்.எச். ரகமத்துல்லா, ஜி.ராஜேந்திரன், ரங்கநாதன், ஜெ.விஜய், வழக்கறிஞர் கஜேந்திரன், வெ.தமழ்வாணன், ஜி.கே. கிரிதரன், என்.சுரேஷ், பி.சலாவுதீன், என்.குமரன், பாலாஜி, சி.சாய்குமார், சி.சாது, வி.கதிரவன், ஆர்.எஸ்.சந்திரகுமார், ராமச்சந்திரன், சிவா, வெங்கடேசன், காளி, சக்திவேல், ராஜ்குமார், என்.தணிகாலசம், அன்பழகன், எஸ்.எஸ். குமார், எஸ்.எஸ். கண்ணன், ஜஹாங்கீர், எம்.சுமதி, என்.செல்வம், குலசை அமான் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எம்.நிஜாம், பி.அமுதா, கே.முருகேசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

பிரசிடென்சி சி.சதீஷ் தலைமை! க.ஜெயராமன் முன்னிலை! வெ.சு.சத்யநாராயணன் வரவேற்புரை!

சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

எஸ் மோகன் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.- கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21-

சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவு விழாவை முன்னிட்டு பள்ளி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா இன்று (21.6.2024 - வெள்ளிக்கிழமை) மதியம் 3 மணி அளவில் செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் நடை பெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிரசிடென்சி சி.சதீஷ் ஏற்பாட்டில் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் 36-வது வட்டச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர். ஆர் மலைச்சாமி, 36 அ வட்டக் செயலாளர் க.பாபு, பகுதி துணைச் செயலாளர் எஸ்.சாக்ரடீஸ் முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு.சத்ய நாராயணன் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் மாணவ மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கழக மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் வழங்குகிறார். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா. நரேந்திரன் மாவட்ட துணை செயலாளர் எஸ். ஆர். கமலக்கண்ணன், மாவட்ட பொருளாளர் வி.தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் எ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன், க. அமுல், மாமன்ற உறுப்பினர்கள் சர்பஜெயாதாஸ், சி.ஆனந்தி, க.ஷர்மிளா காந்தி,

பெரம்பூர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன், ஜி.மாரிமுத்து, கேபிள் கே.தினகரன், வி.முருகன், பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் கே.வி.ராஜன், என்.கார்த்திபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழ் அரசு, சி.எஸ்.ரவி, சென்னை வடக்கு மாவட்ட, மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு.ரவிக்குமார், நி.எழில், அரசன், ந.ம.மகேஷ், குமார், எஸ். சத்திஸ்வரி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர் எம் ஆர்.டி.அப்துல் ரகுமான், கூல் பாயிண்ட் பி.பிரகாஷ், அணிகளின் துணை அமைப்பாளர் டி.வளன் ராஜ், நா. நடராஜன், கே.சேதுராமன், மாவட்ட பிரதிநிதிகள் நா. திருமலை, புல்லட் எஸ். செபஸ்டின், ச.சச்சி தானந்தம், வட்ட கழக நிர்வாகிகள் க.அ.முர்த்தி, கே.எம்.குழந்தைசாமி, என்.சரவணன், எம்.மதிவாணன், எச். மோகனா, துரை.பாஸ்கர், வி.முரளிதரன், கே.ஜி.சீனிவாசன், எம்.எஸ்.முருகன், அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நா.ரவிச்சந்திரன் நா.பாஸ்கர் அ.யஷ்வின்குமார், டி. சங்கர், கே.தஸ்தகீர், பி.ஜி. எத்திராஜுலு, சி.கிருஷ்ண மூர்த்தி, தட்சிணாமூர்த்தி மற்றும் பகுதி நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்

நன்றியுரை பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் எல்.பொன்னரசன்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (20.06.2024) மாலை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2024- 2025ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியக் கோரிக்கையின் மீதான புதிய அறிவிப்புகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் திருமதி.ப.காயத்ரி கிருஷ்ணன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.